# ரூஹ்அல்லாஹ்

தன் கற்பைக் காத்துக்கொண்டவரை (ஞாபகமூட்டுங்கள்). ஜிப்ரயீல் மூலம் அவருடைய கர்ப்பத்தில் நாம் ஊதினோம். அவரையும், அவருடைய மகனையும் உலகத்தாருக்கு ஓர் அத்தாட்சியாகவும் ஆக்கினோம்.

சூரா 21:91

"உண்மையையும் அறிவீர்கள், உண்மை உங்களை விடுதலையாக்கும்".

# அறிமுகம்

சவுதி அரேபியாவின் மாண்புமிகு மன்னர் பஹத் அவர்களுக்கும், இஸ்லாமிய அமைப்பு மற்றும் குர்-ஆனை அரபு மொழியிலிருந்து மற்ற உலக மொழிகளில் மொழி பெயர்த்த மொழிபெயர்ப்பாளர்களுக்கும் நான் நன்றியை தெரிவித்துக கொள்கிறேன். என்னுடைய தாய்மொழியில் குர்-ஆனை படிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த துனியாவில் உள்ள 20% முஸ்லீம்கள் மட்டுமே அரபு மொழியில் குர்-ஆனை படிக்க தெரிந்தவர்கள். அரபு மொழியில் குர்-ஆனை படிக்கக்கூடிய அதிகமானோருக்கு அதின் அர்த்தம் புரிவதில்லை. யாராவது ஒருவர் அவர்களுக்கு விளக்கினால்தான் அதன் அர்த்தம் புரியும். வேறுவிதமாக சொன்னால், வேறு ஒருவருடைய வார்த்தையின் மூலமே குர்-ஆனின் செய்தியை அவர்களால் கேட்க முடிகிறது. இனி அதற்கு அவசியம் இல்லை. இதற்காக மன்னர் பஹத் அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமை பட்டிருக்கிறேன்.

நீங்கள தன்னுடைய செய்தியை புரிந்துகொள்ள வேண்டுமென அல்லாஹ் விரும்புகிறார். ஆனால் அல்லாஹ் சொல்வது என்ன என்று தெளிவாக புரியாத நிலையில்

நீங்கள் எப்படி அவருக்கு கீழ்ப்படிய முடியும்? முகமது நபிக்கு (ஸல்) முன் வாழ்ந்த முஸ்லீம்களோடு அல்லாஹ் தன் சொந்த மொழியில் பேசினார். அல்லாஹ்-வின் செய்தியை புரிந்து கொள்ள கீழ்கண்ட சம்பவம் உதவியாக இருக்கும்.

இந்தியாவில் துணி தொழிற்சாலை நடத்தும் ஒரு அரேபிய முதலாளி தன் தொழிற்சாலை ஊழியர்களுக்கு சிகப்புநிற சட்டையை தைக்காமல் மஞ்சள்நிற சட்டையை தைக்கும்படியும், அவர்களின் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை தருவேன் என்றும் கடிதம் எழுதினார். அரபு முதலாளிக்கு உருதோ, இந்தியோ பேசத்தெரியாது. ஆனால் அவருடைய இந்திய அலுவலகரான மேனேஜருக்கு அரபு, உருது மற்றும் இந்தி மொழிகள் தெரியும்.

கடிதம் வந்தவுடன் இந்திய ஆபீஸ் மேனேஜர் கடிதத்தை வாசித்து அப்படியே கடிதத்தை மேஜையில் தொழிலாளிகளின் முன்னிலையில் வைத்துவிட்டார். கடிதத்தை பெற்றுக்கொண்டதில் தொழிலாளர்களுக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால் சிகப்பு நிற சட்டையை அவர்கள் மஞ்சள் நிற சட்டையாக மாற்றி தைக்கவில்லை. ஏனென்றால் அவருடைய அறிவுரைகளை அவர்கள் புரிந்து-கொள்ளவில்லை. இந்த தவறை முதலாளி கண்டுபிடித்த போது அவர் மிகுந்த வேதனைப்பட்டார். பிறகு தனக்கு வேலைசெய்ய புதிய மேனேஜரையும், புதிய தொழிலாளர்களையும் வைத்துக்கொள்ள

முடிவு செய்தார். தன் கட்டளையை தெளிவாக புரிந்து கொள்ளுகிற தொழிலாளர்களோடு வேலை செய்ய அந்த அரபு முதலாளி விரும்பினார். தன் கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு கூடுதல் போனஸை தரவும் அவர் விரும்பினார்.

அல்லாஹ்வின் செய்தியை தவறவிட வேண்டாம். நீங்கள் அல்லாஹ்வின் செய்தியை புரிந்துகொள்ள மற்றவர்களை சார்ந்துகொள்ள வேண்டாம். மாறாக, நீங்கள் உங்கள் சொந்த மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு குர்ஆனை கண்டுபிடியுங்கள். நம்முடைய வாழ்க்கையை மாற்றக்கூடிய பொக்கிஷங்களை கண்டுபிடிப்போம் வாருங்கள்

## உண்மையான (சரியான) முஸ்லீம்கள்
## ஆல-இம்ரான் 3:42-55

என் தாய் மொழியில் குர்-ஆனை ஓதும் பொழுது, நம்பிக்கையால் என் இருதயத்தை நிரப்பின ஒரு பகுதிக்கு வந்தேன். சூரா ஆல-இம்ரான் 3:42-55-ன் உண்மையை நீங்கள் புரிந்துகொண்டால் அதே நம்பிக்கையை நீங்களும் பெறலாம், இந்த உண்மையை கண்டுபிடிக்க எல்லோருக்கும் கண்கள் இல்லையே என்று பார்க்கும் போது என் இருதயத்தில் வேதனைப் படுகிறேன். அல்லாஹ் உங்கள் கண்களை திறக்கும்படி நான் உங்களுக்காக துஆ செய்கிறேன்.

அல்மாயிதா 5:83-ஐ ஓதுங்கள் “தவிர, தூதர் மீது அருளப்பட்டவைகளை செவியுற்றால் உண்மையை அவர்கள் உணர்வதன் காரணமாக அவர்களின் கண்கள் கண்ணீர் வடிப்பதை காண்பீர்கள். அன்றி “எங்கள் இறைவனே! (இவ்வேதத்தை) நாங்கள் நம்பிக்கை கொண்டோம், ஆகவே சாட்சி கூறுவர்களுடன் எங்களையும் நீ பதிவுசெய்து கொள்வாயாக! என்றும் கூறுகின்றனர்”.

இந்த ஆயத்தில் “அவர்கள்” என்பது யாரைக் குறிக்கும்? எந்த ஜனங்களால் அல்லாஹ் சொல்லும் உண்மையை கண்டுபிடிக்க முடியும்? சூரா ஆல இம்ரானில் நாம் இதற்கு பதிலை கண்டு பிடிக்க முடியும்.

சூரா ஆல இம்ரான் 3:42-55 -ஐ கணக்கில் வைக்க முடியாத அளவுக்கு பலமுறை ஓதியிருக்கிறேன். ஒவ்வொருமுறை நான் ஓதும் போதும், நான் முதல் முறை (அல்-ஹக்) உண்மையை கண்டுபிடித்ததினால் உண்டான அதே சந்தோஷம் எனக்கு ஏற்படுவதை அறிந்தேன். என்னுடைய கண்டுபிடிப்பு ஒன்றும் புதிதல்ல. பலருடைய கண்கள் இப்படிப்பட்ட உண்மைக்கு நேராக திறக்கிறபடியால் அவர்களும் அதே சந்தோஷத்தை பெற்றுக்கொள்கிறார்கள். சூரா ஆல இம்ரான் 3:42-55-ஐ படிக்கும்

நூற்றுக்கணக்கான முஸ்லீம் சகோதரர்களின் கண்களும் திறக்கப்படுகிறது. இந்த உண்மையை கண்டுபிடிக்கிறவர்கள் “உண்மையான” அல்லது “பூரணமான” முஸ்லீம்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கின்றனர்.

அனேக முஸ்லீம்களின் சொப்பனத்தில் ஆல-இம்ரான் 3:42-55-ன் உண்மையை அல்லாஹ் பேசி அதை உறுதி செய்கிறார். சமீபத்தில் உலகின் பல இடங்களில் உள்ள 600 உண்மையான முஸ்லீம்களிடம் ஒரு ஆய்வு செய்யப்பட்டது. மொத்தமுள்ள 600 முஸ்லீம்களில், 150-பேர் தங்கள் கனவில் அல்லாஹ்-வின் தூதுவர் தோன்றி சூரா ஆல இம்ரான் 3:42-55-ன் உண்மையை வெளிப்படுத்தியதால் நாங்கள் “உண்மையான” முஸ்லீம்களாக மாறினோம் என்றார்கள். சில “உண்மையானமுஸ்லீம்கள்” தங்கள் சொப்பனத்தில் முஹம்மது நபி (ஸல்) (அவர்மேல் சமாதானம் இருப்பதாக). அவர்கள் பேசுவதை பார்த்திருக்கிறார்கள். இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட உண்மையை அவர்கள் உறுதிப்படுத்தியதாகவும் கூறுகின்றனர்.

ஒரு தூய கித்தாப்பின் ஆயத்து இப்படி சொல்கிறது, (குர்-ஆனுக்கு முன்பு எழுதப்பட்ட இன்ஜீல் கித்தாப்) “உண்மையை (அல்ஹக்கை) அறிவீர்கள், உண்மை உங்களை விடுதலை-

யாக்கும்". இதை வாசிக்கும் அன்பு நண்பரே, நீங்கள் விடுதலை ஆக்கப்பட்ட உண்மையை தெரிந்து கொள்ள வேண்டுமா?

சூரா ஆல- இம்ரான் 3:42-55-ன் இந்த அற்புதமான பகுதியை ஒவ்வொரு ஆயத்தாக, நீங்களே உங்கள் குர்-ஆனில் ஓதுங்கள். தயவு செய்து உங்கள் நேரத்தை ஒதுக்கி இதை ஓதுங்கள். ஒவ்வொரு ஆயத்துக்கும் என் விளக்கங்களை நான் உங்களுக்கு விவரித்து கொடுத்துள்ளேன். இந்த உண்மையை (அல்ஹக்கை) நீங்கள் புரிந்து கொண்டு, உண்மையான முஸ்லீம் இயக்கத்தில் சேர்ந்துக்கொள்ளுங்கள். உங்கள் கண்களை அல்லாஹ் திறக்கும்படி நான் உங்களுக்காக துஆ செய்கிறேன்.

சூரா ஆல இம்ரான் 3:42-55-ம் அதன் விளக்கமும்

3:42 மலக்குகள் கூறிய சமயத்தில் "மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான். உங்களை பரிசுத்தமாகவும் ஆக்கியிருக்கின்றான். உலகத்திலுள்ள பெண்கள் அனைவரையும்விட உங்களை மேன்மையாக்கியும் வைத்திருக்கின்றான்.

3:43 (ஆகவே) மர்யமே! நீங்கள் உங்களுடைய இறைவனுக்கு வழிப்பட்டு குனிந்து (சிரம் பணிந்து) வணங்குபவர்களுடன் நீங்களும் குனிந்து (சிரம் பணிந்து) வணங்குங்கள்! (என்று கூறினார்கள்)

இன்ஜீல் (சுவிசேஷம்) ஷரிப் எழுதப்படுவதற்கு முன்பு 400 வருஷங்கள் வேதத்தை உடையோர்களுக்காக பேசுவதற்கு ஒரு நபியும் இல்லாமல் இருந்தார்கள். அல்லாஹ்வின் ஜனங்களோ நம்பிக்கை இழந்து, திடனற்று குழியின் அடித்தளத்தில் கிடந்தனர்.

இந்த துனியாவின் சரித்திரத்தில் அது ஒரு இருளான சமயம், இயல்புக்கு மிகவும் மாறாக அல்லாஹ் ஒன்றை செய்தார். ஜிப்ரயீல் மலக்கு மூலம் அல்லாஹ் இளம் கன்னிப்-பெண்ணாகிய மர்யம் அலை அவர்களுடன் பேசினார். ஒரு சிறப்பான பணியை நிறைவேற்றுவதற்காக அல்லாஹ் உங்களை தெரிந்து கொண்டார் என்று ஜிப்ரயீல் கூறினார். ஆனால், முதலில் மர்யம் அலை அவர்கள் ஒரு உண்மையான முஸ்லீம் ஆக இருக்கும்படி அல்லாஹ்-விடம் தான் பெற்ற அழைப்பை உறுதி செய்து கொண்டார். அல்லாஹ்விற்கு தன்னை ஒப்புக்கொடுத்து, முழுமையாக கீழ்படிந்திருக்கும்படி மர்யம் அலை அவர்களுக்கு சொல்லப்பட்டது.

3:44 “இவை மறைவான விஷயங்களாகும். இவைகளை நாம் உங்களுக்கு வஹ்யின் மூலம் அறிவிக்கின்றோம். அன்றி, மர்யம் அவர்களை வளர்க்க யார் பொறுப்பேற்றுக் கொள்வது என்று (அறிய) அவர்கள் தங்கள் எழுதுகோல்களை (ஆற்றில்) எறிந்தபோதும் நீங்கள் அவர்களுடன் இருக்கவில்லை. அவர்கள் தர்க்கித்துக் கொண்ட-போதும் நீங்கள் அவர்களுடன் இருக்கவில்லை.

44-ம் ஆயத்தில் உள்ள நிகழ்வு தெளிவாக இல்லை. ஒரு அரசியல் தலைவன் அனேக வாலிபர்களை ஒன்றாக திரட்டுவதைப் போல் இருக்கிறது. அவர்கள் ஒன்று சேர்ந்தவுடனே மர்யம் அலை அவர்களையும், அவர்களின் குழந்தையையும் பாதுகாப்பதற்காக ஒருவரை சீட்டுப்போட்டு அல்லாஹ் யாரை தெரிந்து கொள்கிறார் என்று பார்க்கிறதைப் போல் இருக்கிறது. யூசுப் அலை அவர்கள் மர்யம் அலையின் கணவர் என்று சரித்திரம் நமக்கு சொல்கிறது.

இதைவிட மிகவும் ஒரு ஆச்சரியமான சம்பவம் நடந்தாக நாம் குர்-ஆனில் எந்த இடத்திலும் வாசிக்க முடியாது. இந்த துனியாவின் எல்லா ஜனங்களுக்காகவும் அல்லாஹ் சிறப்பான ஒன்றை செய்தார், இதற்கு முன்போ அல்லது இப்பொழுதோ இப்படி சிறப்பான ஒரு சம்பவம் நடந்ததே இல்லை.

3:45 (மேலும், மர்யமை நோக்கி) மலக்குகள் “மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய (ஆகுக!என்ற) ஒரு வார்த்தையைக் கொண்டு உங்களுக்கு (ஒரு குழந்தையை அளிக்க) நற்செய்தி கூறுகின்றான்” என்றும் “அதன் பெயர் அல் மஸீஹ் ஈஸா” (இயேசு மேசியா) இப்னு மர்யம்” என்பதாகும். அவர் இம்மை மறுமையில் மிக்க கம்பீரமானவராகவும், (இறைவனுக்கு) மிக்க நெருங்கியவர்களில் ஒருவராகவும் இருப்பார்” என்றும் கூறினார்கள்.

ஈஸா நபியை பெற்றெடுக்க அல்லாஹ் மர்யம் அலை அவர்களை தெரிந்து கொண்டதை 45-ம் ஆயத்து அறிவிப்பதை பார்க்கலாம். உலகம் முழுவதிலும் உள்ள முஸ்லீம்கள் “ஈஸா மஸீஹ்” அவர்களுக்கு இரண்டு பெயர்களை வைத்திருக்கிறார்கள் “ஈஸா கலிமத்துல்லாஹ்” (அல்லாஹ்வின் வார்த்தை) மற்றும் “ஈஸா ரூஹுல்லாஹ்” (அல்லாஹ்வின் ஆவி). ஏன் முஸ்லீம்கள் ஈஸாவை இந்த இரண்டு பெயர்களாலே அழைக்கிறார்கள்?.

இதற்கான பதில் சூரா ஆல-இம்ரான் 3-45 மற்றும் சூரா அல் அன்பியா 21:91-ல் பார்க்கலாம். மர்யமின் கர்ப்பத்தில் அல்லாஹ் தன்னுடைய

கலிமாவை (வார்த்தையை) வைப்பேன் என்று கூறுகிறார். அல்லாஹ்வின் “வார்த்தை” என்றால் யார் அல்லது என்ன? இதை சரியாக புரிந்து கொள்ள சூராஅல் அன்பியா 21:91-ஐ ஓதுங்கள், …தன் கற்பைக் காத்துக்கொண்ட (மர்யம் என்பவரையும் நீங்கள் ஞாபகமூட்டுங்கள். நம்முடைய தூதர்) ஜிப்ரயீல் மூலம் அவருடைய கர்ப்பத்தில் நாம் ஊதினோம். அவரையும் அவருடைய மகனையும் உலகத்தாருக்கு ஓர் அத்தாட்சியாகவும் ஆக்கினோம் “ஈஸா மஸீஹ்-யை நாம் ஏன் “ஈஸா கலிமத்துல்லாஹ்” என்றும் “ஈஸா ரூஹுல்லாஹ்” என்றும் சொல்லுகிறோம்? குர்-ஆன் அதை தெளிவாக்குகிறது, “ஈஸாவே வார்த்தை (கலீமா) மற்றும் ஆவியும் (ரூஹ்) ஆனவர். வேறு எந்த நபரும் அல்லது நபியும் இந்த பட்டத்தை பெறவில்லை.

அல்லாஹ்வின் “வார்த்தை” (கலீமா) மற்றும் “ஆவி” (ரூஹ்) மர்யம் அலை கர்ப்பத்தில் வைக்கப்பட்டு மாம்சத்தில் குழந்தையாக பிறந்தார், அல்லாஹ் மர்யம் அலையிடம் “ஈஸா அல்-மஸீஹ்” (மேசியாவாகிய ஈஸா)என்று பெயர் வைக்க சொன்னார். மஸீஹ் என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் அல்லது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர், “ஈஸா” பிறப்பதற்கு 758 வருஷங்களுக்கு முன்பே ஏசாயா நபி இவ்வாறு

எழுதியிருக்கிறார், "…இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு 'இம்மானுவேல்' என்று பேரிடுவாய்" (ஏசாயா. 7:14) இம்மானுவேல் என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம் "அல்லாஹ் நம்மோடு இருக்கிறார்" என்பதாகும்

ஈஸா மஸீஹ் இம்மையிலும், மறுமையிலும் எல்லோராலும் கனப்படுத்தப்படுவார். மேலும் அவர் அல்லாஹ்விற்கே மிக்க நெருக்கமானவராகவும் இருப்பார். குர்-ஆன் "ஈஸாவை" அல்லாஹ்வின் கலீமா என்றும், அல்லாஹ்வின் ரூஹ் என்றும் "வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர் என்றும் (எல்லா) உலகத்-தாருக்கும் ஓர் அத்தாட்சியாகவும் ஆக்கினோம்" என்று (அல் அன்பியா 21:91) குர்-ஆன் ஈஸாவை நமக்கு வர்ணம் தீட்டி படமாக்குகிறது. நாம் முன்பு போகாத ஒரு இடத்திற்கு போக வேண்டுமானால் நம்மை வழிநடத்த ஒரு அடையாளத்தைத் தேடுவோம். நாம் ஈஸா மஸீஹை பின்பற்றினால் எங்கே போவோம்?

3:46 "அன்றி அவர் தொட்டிலில் (குழந்தையாக) இருக்கும் பொழுது (தன் தாயின் பரிசுத்தத் தன்மையை பற்றியும், தன் நபித்துவத்தைப் பற்றி) வாலிபத்திலும் மனிதரோடு

பேசுவார். தவிர நல்லொழுக்கம் உடையவர்களில் ஒருவராகவும் இருப்பார்”. (என்றும் கூறினார்கள்).

‘ஈஸா மஸீஹ்-ன் பிறப்பு அகில உலகத்திற்கும் நற்செய்தியாகும், மேலும் அவர் நல்லொழுக்கம் உடையவர்களில் ஒருவராகவும் இருக்கிறார். ‘ஈஸா மஸீஹ்’ எப்படி நல்லொழுகம் உடையவர்? சூரா மர்யம் 19:19-ல் ஈஸா மஸீஹ் ஒரு பிழையும் இல்லாத மகனாக இருப்பார் என்று அல்லாஹ் மர்யமுக்கு சொன்னார், ‘ஈஸா மஸீஹ்’ யாரையும் கொலை செய்யவில்லை என்று, இன்ஜீல் ஷரிப் நமக்கு போதிக்கிறது. ‘ஈஸா மஸீஹ்’ பணத்திற்காக ஆசைப்படவில்லை, அவர் நிக்காஹ் செய்யவில்லை. மதத்தலைவர்களிடம் காணப்பட்ட நேர்மையற்ற அசுத்தங்களுக்கு எதிராகப் பேசினார், அவர் ஒவ்வொரு நாளும் துஆ செய்தார், 40 நாட்கள் இரவும் பகலும் ஒன்றும் சாப்பிடாமல் நோன்பு இருந்தார், நமக்கு தீமை செய்பவர்களை அன்பு கூறச் சொன்னார், ‘ஈஸா மஸீஹ்’ ஒருபோதும் ஹராம் செய்யவே இல்லை. ஈஸா மஸீஹ் எப்பொழுதாவது ஹராம் செய்திருப்பாரானால் அவர் அல்லாஹ் கலிமத்துல்லாஹ் அல்லது ரூஹுல்லாஹ்வாக அல்லாஹ்வோடு இருக்கும்படி ஜன்னத்திற்கு சென்றிருக்கவே மாட்டார். ‘ஈஸா மஸீஹ்-ன் மூலம் அல்லாஹ் உலகத்திற்கு ஒரு “உண்மையான”

முஸ்லீம் எப்படி வாழ வேண்டுமென காண்பித்தார். நாம் எல்லோரும் ஈஸாவைப் போல வாழ்ந்தால் இந்த உலகம் ஒரு அற்புதமானதாக இருக்கும்

3:47 (அதற்கு மர்யம்) “என் இறைவனே! ஒருவருமே என்னைத் தீண்டாதிருக்கும்போது, எனக்கு எவ்வாறு சந்ததி ஏற்பட்டுவிடும்?” என்று கூறினார். “இவ்வாறே, அல்லாஹ் தான் நாடியதை படைக்கின்றான். அவன் ஒரு பொருளை (படைக்க) நாடினால் அதனை ‘ஆகுக’ என அவன் கூறியவுடனே அது ஆகிவிடும்”. என்று கூறினான்.

அல்லாஹ் கொடுத்த செய்தியை கேட்டு மர்யம் அவர்கள் அதிர்ச்சியடைந்தார். மர்யம் அலை அவர்கள் அல்லாஹ்விடம், “எனக்கு இன்னும் நிக்காஹ் ஆகவில்லை, எந்த மனிதரும் இதுவரை என்னைத் தொடவும் இல்லை. பின்பு எப்படி எனக்கு பிள்ளை உண்டாகும் என்று கேட்டார்” அல்லாஹ் மர்யமிடம் மிகவும் பொறுமையோடிருந்து அவருக்கு பதில் சொன்னார். “நான் அல்லாஹ், நான் விரும்புவதை என்னால் மிகவும் சுலபமாக செய்யமுடியும்” என்றார்.

அல்லாஹ் எதையும் விபத்தாக செய்கிறவர் அல்ல, தன்னுடைய பரிபூரணமான திட்டத்தின்படியே எல்லாவற்றையும் செய்கிறவர்.

அல்லாஹ் ‘ஈஸாவை___தகப்பனில்லாமல் ஏன் பிறக்க வைத்தார்? தகப்பன் இல்லாமல் பிறந்த வேறொரு நபியை உங்களுக்குத் தெரியுமா? எல்லா முஸ்லீம்களுக்கும் இந்த சம்பவம் என்ன சொல்லுகிறார்.

இந்த கேள்விக்கு பதில் சொல்வதற்கு ஆதமின் வாழ்க்கையை மிக அருகில் சென்று பார்க்க வேண்டும். ஆல இம்ரான் 3:59-ல் ஈஸாவுக்கு உதாரணம் ஆதமுடைய உதாரணத்தைப் போன்றதே! என்று குர்-ஆன் கூறுகிறது. இவர்கள் இருவரும் ஒரேவித-மானவர்கள். ஏனென்றால் இந்த இரண்டு நபிகளுக்கும், உலகப்பிரகாரமான தகப்பன் இல்லை. ஆதம் அல்லாஹ்விற்கு கீழ்படியாமல் போனதற்கு முன்பு அச்சோலை வனத்தில் அல்லாஹ்வுடன் நடந்தார், ஆதம் அல்லாஹ்வின் சமூகத்தில் எப்பொழுதும் இருந்து அவரோடு பேசினார். ஏனென்றால், அவர் எந்த ஹராமும் செய்யவில்லை, “ஈஸாவைப்போல ஆரம்பத்தில் ஆதம் அலை நல்லொழுக்கமும், பரிசுத்தமும் உள்ளவராக இருந்தார். ஏனென்றால் ஆதம் அல்லாஹ்வின் தூய்மையான சுவாசத்தினால் உருவாக்கப்பட்டார். ஒரே ஒருமுறைதான் ஆதம் அல்லாஹ்வுக்கு கீழ்படியாமல் போனார். அதன் விளைவாக ஆதம் இப்போது அசுத்தமாக

இருப்பதினால், அல்லாஹ்வுடன் அச்சோலையில் இருக்க முடியவில்லை.

சூரா தாஹா 20:121-ஐ ஓதுங்கள், ஆகவே அவ்விருவரும் (ஆதமும்ஹவ்வாவும்) (தடுக்கப்பட்ட) அதனைப் புசித்துவிட்டார்கள். உடனே (நிர்வாணமாகி) அவ்விருவரின் மானமும் வெளியாகவே அச்சோலையின் இலைகளைக் கொண்டு தங்களை மறைத்துக் கொள்ள முற்பட்டார்கள். ஆகவே ஆதம் தன் இறைவனுக்கு மாறு செய்து வழித்தவறிவிட்டார்."

"ஈஸா அல் மஸீஹ்"-ஐ தவிர நிச்சயமாக நாம் எல்லோரும் ஆதமின் பிள்ளைகளாக இருக்கிறோம். ஆப்பிள் மரம் ஆப்பிள் பழத்தை தரும். ஆப்பிள் மரம் ஆரஞ்சு பழத்தைத் தருமா? ஆதமின் சந்ததியில் பிறந்த எல்லோரும் ஆதமின் சுபாவத்தை பெற்றிருக்கிறோம். ஆதமுடைய ஹராமின் சாபம் அவனுடைய பின் சந்ததிகளை ஹராமிற்குள்ளாக்குகிறது. ஹராமே செய்யாத ஒரே மனிதர் 'ஈஸா மஸீஹ்' மட்டுமே. அவர் ஹராம் செய்யவில்லை காரணம் அவர் ஆதமின் அலையின் இரத்த சம்பந்தமான வரிசையில் பிறக்கவில்லை. ஆதமின் ஹராம் சுபாவத்தை ஈஸா சுதந்தரித்திருக்கவில்லை.

இப்பொழுது நான் ஏன் குர்-ஆனை ஓத விரும்புகிறேன் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? அபிஷேகம் பண்ணப்பட்டு முன்னுரைக்கப்பட்ட ஈஸா மஸீஹ், அல்லாஹ்வின் வார்த்தையாகவும், ஆவியாகவும் இருக்கிறார் என்பதையும் அவர் ஹராம் இல்லாதிருக்கிறார் என்பதையும் நான் கண்டுபிடித்த போது அது எனக்கு மிகுந்த மனத்தெளிவை தந்தது. காத்திருங்கள், இன்னும் அதிகம் இருக்கிறது………

3:48 "மேலும் (அல்லாஹ்) அவருக்கு (ஈஸாவுக்கு) வேதத்தையும், ஞானத்தையும், தவ்றாத்தையும், இன்ஜீலையும் (சுவிசேஷம்) கற்பிப்பான்".

அல்லாஹ் ஈஸாவிற்கு பரிசுத்த கித்தாப்களை (புனிதமான வேதங்கள்) கற்ப்பித்தார். சரியான முஸ்லீம்கள் தௌராத், சபூர், இன்ஜீல் மற்றும் குர்-ஆன் ஆகிய இந்த நான்கு கித்தாப்களிலும் உள்ள எல்லாவற்றையும் ஓதவும், அவைகளை நன்கு புரிந்து கொள்ளவும் முடியும். தௌராத் (தோரா), சபூர் (எழுதப்பட்டவைகள்) மற்றும் இன்ஜீல் (சுவிசேஷம்) இவைகளை நான் ஓதினேன்.

அல்லாஹ் முகம்மது நபிக்கு (ஸல்) (அவன்மீது சமாதானம் உண்டாவதாக) சொன்ன

ஆலோசனை, ஜன்னத்தில் இருந்து வந்த செய்தியில் எதாகிலும் உமக்கு சந்தேகம் இருக்குமானால் "முன்னுள்ள" இத்தப் கித்தாப்-களை ஓதுபவர்களிடம் நீ உன் சந்தேகத்திற்கு பதிலை பெற்றுகொள்ள வேண்டுமென" கூறினார். ஏனென்றால், இவைகள் குர்-ஆன் எழுதப்-படுவதற்கு முன் எழுதப்பட்டவைகள் ஆகும்.

சூரா யூனுஸ் 10:94 (நபியே!) நாம் உங்களுக்கு அருட்செய்திருக்கும் இதில் (சிறிதும் சந்தேகம் கொள்ளாதீர்கள்.) நீங்கள் சந்தேகித்தால் உங்களுக்கு முன்னர் அருளப்பட்ட வேதங்களை ஓதுபவர்களிடம் நீங்கள் கேட்டுப் பாருங்கள். நிச்சயமாக உங்கள் இறைவனிடம் இருந்தே உண்மை(யான இவ்வேதம்) உங்களிடம் வந்தது. ஆதலால், சந்தேகப் படுபவர்களில் நீங்களும் (ஒருவராக) ஆகிவிடவேண்டாம்".

இந்த கித்தாப்கள் அனைத்தும் நேரடியாக மூல பாஷையிலிருந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு நம்பத்தகுந்ததாக இருக்கிறது "முன்னுள்ள" கித்தாப்களை ஓதும் போது ஒரு நிறைவான முஸ்லீம் ஆக என்னையே நான் உணருகிறேன் என்று என் நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார். ஒரே ஒரு கால் உள்ள பசுமாடு நிற்கமுடியாது, ஆனால் நான்கு கால்களோடு அது நிற்கும்போது, மிகவும் சக்தி

வாய்ந்ததாக கருதப்படும். ஒரு “உண்மையான” முஸ்லீம் எல்லா கித்தாப்களையும் ஓதுவார்.

சூரா 4:136 நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், அவன் தன்னுடைய தூதர்மீது அருளிய இவ்வேதத்தையும், இதற்கு முன்னர் அவன் அருளிய வேதங்களையும் நம்பிக்கை கொள்ளுங்கள். எவன் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் நிராகரிக்கின்றானோ அவன் நிச்சயமாக வெகு தூரமான வழி கேட்டில்தான் செல்கின்றான்.

“முன்னர்” அருளப்பட்ட கித்தாப்கள் மாற்றப்பட்டுள்ளதா? “இல்லை” என்று குர்-ஆன் சொல்லுகிறது. தன்னுடைய செய்தியை பாதுகாக்க அல்லாஹ்-வுக்கு போதுமான வல்லமை இல்லையா?

குர்-ஆன் சூரா அல் அன்ஆம் 6:114-115-ஐ ஓதுவோம். (முகம்மது நபியே!) உங்களது இறைவனின் வாக்கு உண்மையாகவும் நீதமாகவும் முழுமையாகிவிட்டது. அவனுடைய வாக்குகளை மாற்றுபவன் யாருமில்லை. அவன் செவியுறு-பவனாகவும், நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்.

அல்லாஹ்-வின் வார்த்தைகளை மாற்று-பவன் யாருமில்லை. யாராவது உங்களிடம் "முன்னுள்ள வேதங்கள்" மாற்றப்பட்டுள்ளது என்று சொன்னால், யார் அவைகளை மாற்றினார்கள் என்றும், எப்பொழுது அவை மாற்றப்பட்டது என்றும் கேளுங்கள். இன்ஜீல் எழுதப்பட்டதற்கு பின்பு 600 ஆண்டுகள் கழித்து எழுதப்பட்ட குர்-ஆன், இன்ஜீல் மாற்றப்பட்டுள்ளது என்று ஏன் நமக்கு சொல்லவில்லை என்று கேளுங்கள்.

இப்பொழுது ஆல-இம்ரான் 3:49 இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு (அவரை) ஒரு தூதராகவும் ஆக்குவான். "நிச்சயமாக நான் உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு ஒரு அத்தாட்சி கொண்டு வந்திருக்கின்றேன். உங்களுக்காக களிமண்ணிலிருந்து பறவையைப் போல செய்து அதில் நான் ஊதுவேன். அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு அது (பறக்கும்) பறவை ஆகிவிடும். பிறவிக் குருடனையும் வெண்குஷ்டரோகியையும் நான் குணப்படுத்துவேன். அல்லாஹ்வின் அனுமதி கொண்டு மரணித்தோரையும் நான் உயிர்ப்பிப்பேன். நீங்கள் புசித்தவைகளையும், உங்கள் வீட்டில் நீங்கள் சேகரித்து வைத்திருப்பவைகளையும் நான் உங்களுக்கு அறிவிப்பேன். மெய்யாகவே நீங்கள் நம்பிக்கை

கொண்டவர்களாக இருந்தால் இதில் உங்களுக்கு ஒரு அத்தாட்சி இருக்கிறது.

ஈஸா மஸீஹ் களிமண்ணிலிருந்து உயிருள்ள பறவையை படைத்ததை நான் ஓதும்போது, அல்லாஹ் ஆதம் அலையை பூமியின் களிமண்ணினாலே படைத்த சம்பவம் என் ஞாபகத்திற்கு வருகிறது. இந்த 49-ம் ஆயத்தின் சம்பவத்திலிருந்து அல்லாஹ் 'ஈஸா அவர்களுக்கு' உயிரை உருவாக்குகிற வல்லமையை கொடுத்திருந்தார். அல்லாஹ்வின் வல்லமையோடு "ஈஸா மஸீஹ் வெண்குஷ்டரோகிகளை சுகமாக்கினார். பிறவிக் குருடனையும் முடவர்களையும் சுகமாக்கினார், அதுமட்டுமல்ல ஈஸா மஸீஹ் மரித்தோரையும் உயிரோடு எழுப்பினார்.

இந்த ஆயத்தை படித்தவுடன் மறுபடியும் என் ஆத்துமா நம்பிக்கையால் நிறைந்தது. மரணத்தின் மேலும், ஜீவனின் மேலும் ஈஸாவிற்கு வல்லமை தரப்பட்டிருந்தது. சாவின் மீது வல்லமை இது ஒரு ஆச்சரியம்! மரணம்தான் இந்த துனியாவில் என்னுடைய மிகப்பெரிய எதிரி என்று முன்பு நினைத்தேன். ஆனால் இப்பொழுதோ மரணத்தின் மேல் வல்லமை ஈஸாவிற்கு இருப்பதை நான் குர்-ஆனில் அறிந்து கொண்டேன். உம்முடைய மிகப்பெரிய கடைசி எதிரியான

மரணத்தை ஜெயிக்கிற ஒரு நபிக்காக இந்த துனியா இதுவரை காத்துக்கொண்டிருக்கிறது. ஈஸாவிற்கு மரணம் மற்றும் ஜீவனை அளிக்கிற வல்லமை கொடுக்கப்பட்டிருந்தால் அவரால் நமக்கு என்ன செய்ய முடியும்?

3:50 "என் முன்னால் உள்ள தவ்றாத்தையும் நான் உண்மையாக்கி வைத்து (முன்னர்) உங்களுக்கு விலக்கப்பட்டவைகளில் சிலவற்றை உங்களுக்கு ஆகுமாக்கி வைப்பதற்காகவும் உங்கள் இறைவனிடமிருந்து (இத்தகைய) அத்தாட்சியை உங்களிடம் கொண்டு வந்திருக்கின்றேன். ஆகவே, நீங்கள் அல்லாஹ்-வுக்கு பயந்து என்னை பின்பற்றுங்கள்".

"முன்னுள்ள கித்தாப்களில்" தன்னுடைய வாழ்க்கையைப்பற்றி நபிமார்கள் சொன்னவைகள் சரியென நிரூபித்து காட்டுவதாகவும் அல்லது உறுதிசெய்யபட்டவையாக இருப்பதாகவும் ஈஸா மஸீஹ் சொல்கிறார்கள். மூலப்பிரதியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட "முன்னுள்ள கித்தாப்களை" நான் வாசிக்கும்போது பழைய நபி மார்கள் ஈஸாவைப்பற்றி அதிகமாக பேசியிருக்கிறார்கள். ஈஸா மஸீஹ்-வை பற்றி முந்நூறு முன்னறிவிப்புகளுக்கும் மேலாக இருப்பதை நான் கண்டு பிடித்தேன்.

ஆல-இம்ரான் 3:50-ல் அல்லாஹ்வுக்கு கீழ்படிவதே நம்முடைய வேலை என்று ஈஸா மஸீஹ் சொல்லியிருக்கிறார். அல்லாஹ்வுக்கு அதிகமான கனத்தை தரவும் ஈஸாவிற்கு கீழ்படியவும் வேண்டும். குர்-ஆன் 3:50-ல் நாம் கண்டுபிடிக்கும் ஈஸா அலை கொடுக்கிற ஒரே கட்டளை "எனக்கு கீழ்ப்படியுங்கள்" என்பது மிகத்தெளிவான கட்டளையாக இருக்கிறது. 'ஈஸாவின்' கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதினால் வரும் ஆச்சரியமான முன் அறிவிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை நீங்கள் பார்ப்பீர்கள்.

ஈஸாவின் கட்டளைகளுக்கு நாம் கீழ்படிய வேண்டுமென்றால், அந்த கட்டளைகளை நாம் எங்கே கண்டு பிடிக்கலாம்? அவைகளை இன்ஜீலில் பார்க்கலாம். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று ஈஸா கட்டளை இட்டதை தெரிந்து கொள்ளாமல், எப்படி அல்லாஹ்வுக்கு அஞ்சி ஈஸாவுக்கு கீழ்படிய முடியும். ஈஸாவிற்கு எப்படி கீழ்படிய வேண்டும் என்பதை, இன்ஜீல் சொல்வதை கவனித்தால்தான் தெரியும். முகமது நபி (ஸல்) அவர்கள் பயன்படுத்தின அதே இன்ஜீல் புத்தகம் இன்றைக்கும் நம்மிடையே உள்ளது. நீங்கள் இன்ஜீலை பார்த்தால் முதல் நூற்றாண்டின் மூலப்பதிப்பில் எழுதப்பட்டு மூல பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதுதானா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

3:51 “நிச்சயமாக அல்லாஹ்தான் என் இறைவனும், உங்கள் இறைவனும் ஆவான். ஆகவே, அவனையே வணங்குங்கள், இதுதான் நேரான வழி” என்றும் கூறினார்.

ஒரு சாலையோ அல்லது பாதையோ எப்பொழுதும் நம்மை சிலவற்றிற்கு அல்லது ஒருசிலருக்கு நேராக நடத்தும். அல்லாஹ்வுக்கு நேராக நம்மை வழிநடத்துகிற பாதையைத்தான் இங்கு நேரான பாதை (தாரிக்கா) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அல்லாஹ்விற்கு நேரான பாதையாக இருக்கிறது. அங்கே புறவழிச் சாலைகளோ அல்லது வளைவுகளோ இல்லை. இது ஒரு நேர்வழி பாதையானதால் அது செல்லவேண்டிய இலக்காகிய ஜன்னத்திற்கு செல்லுவதற்கு முன் நின்றுவிடுவது இல்லை. அப்படியானால் யார் இந்த பாதையில் பிரயாணம் செய்து அல்லாஹ்விடம் செல்வார்கள்?.

நான் தேவையான நன்மைகளை செய்தால் அல்லாஹ் நான் மரணித்த பிறகு, என்னை அவரோடு இருக்கும்படி ஜன்னத்திற்கு அழைத்து செல்வார் என்று மற்றவர்கள் சொல்வதை நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இப்படி சொல்லுகிறவர்கள் குருடனும், அல்லாஹ்-வின் தூய்மைக்கு அவமானமாகவும் இருக்கின்-

றனர். நீங்கள் எத்தனை நன்மைகளை செய்தாலும் அவைகள் ஒன்றும் பெரிதல்ல. உங்கள் ஹராம்களை உங்களால் நீக்கமுடியாது. அல்லாஹ் 100% பரிசுத்தமானன். அவன் சமூகத்தில் எந்த ஹராமும் வரமுடியாது. ஒரே ஒரு ஹராமினாலே அல்லாஹ்வுடைய சமூகத்தில் இருந்து ஆதம் வெளியேற்றப்பட்டார் என்பதை நினைவில் வையுங்கள். 99.9% பரிசுத்தமானவர்கள் ஜன்னத்திற்கு போக முடியாது. உண்மையில் 99.9% பரிசுத்தம் என்பதே ஒருபோதும் இல்லை. பரிசுத்தம் எப்பொழுதும் 100%. தங்கள் பாவங்-களை முற்றிலுமாக நீக்கியவர்கள் மட்டுமே அல்லாஹ்-வுடன் இருக்கும்படி போகமுடியும். இது மிகவும் துக்கமான ஒரு செய்தி. ஏனென்றால் நாம் எல்லோரும் ஹராம் செய்திருக்கிறோம். நாம் முற்றிலுமாக பாவத்திலிருந்து விடுபட்டு பரிசுத்தம் ஆகி, நம்முடைய ஹராம் சுபாவத்தை விட்டு விலக நமக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை, அல்லாஹ் நமக்காக ஒரு வழியை உருவாக்-குவார் என்பதே.

3:52 அவர்களில் பலர் (தம்மை) நிராகரிப்பதை ஈஸா உணர்ந்த போது “அல்லாஹ்-வுக்காக எனக்கு உதவி செய்பவர் யார்? எனக் கேட்டார். அவருடைய தோழர்கள் “நாங்கள் அல்லாஹ்வுக்காக உதவி செய்கின்றோம். மெய்யாகவே! அல்லாஹ்வை நாங்கள் நம்பிக்கை

கொள்கிறோம் (ஆதலால்) நிச்சயமாக நாங்கள் முற்றிலும் அவருக்கு வழிபட்டோம் என்பதாக நீங்கள் சாட்சி கூறுங்கள்” என்று கூறினார்கள்”.

3:53 “எங்கள் இறைவனே! நீ அருட்செய்ததை நாங்கள் நம்புகின்றோம். இத்தூதரையும் நாங்கள் பின்பற்றி நடக்கின்றோம். ஆதலால்(ஈஸாவை) உண்மைப்டுத்தியவர்களுடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக!”.

உலகத்தின் எல்லா ஜனங்களும் அல்லாஹ்-வை தொழவேண்டும் என்பதற்காக சிலரை உதவி செய்ய முடியுமா என்று ஈஸா கேட்கிறார். ஈஸாவிற்கு உதவி செய்யும்படி முஸ்லீம் ஆண்கள் ஒரு சிறு குழுவாக வந்தனர். அல்லாஹ்-வின் செய்தியையும், அவர் இந்த துனியாவிற்கு அனுப்பின செய்தியாளர் (ஈஸாவை)-யும் நம்புகிறோம் என்றனர். குர்-ஆன் சொல்லுகிறபடி ‘ஈஸாவை பின்பற்றுபவர்கள் முஸ்லீம்கள் ஆவார்கள்!”

3:54 (ஈஸாவை நிராகரித்து) “அவர்கள் (அவரைக் கொலை செய்ய) சதி செய்தார்கள். அல்லாஹ் சதி செய்து விட்டான். அல்லாஹ், சதி செய்பவர்களில் மிக மேலானவன்”.

ஷைத்தான் உண்மையை வெறுப்பவன். எனவே ஜனங்கள் உண்மையை கேட்காமல் இருக்க அவன் என்ன வேண்டுமானாலும் செய்வான். சூரா ஆல இம்ரான் 3:42-55-ஐ புரிந்து கொள்ளாமல் எவ்வளவு காலமாக நீங்கள் குர்-ஆனை ஓதிக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் குர்-ஆனை ஓதினால் அதை குறித்து ஷைத்தான் கவலைப்படுவதில்லை. ஆனால் நீங்கள் குர்-ஆனை புரிந்துகொண்டால் ஷைத்தானுக்கு மிகுந்த கவலை. இந்த துனியாவிலுள்ள எல்லாரும் உண்மையை அறிய அல்லாஹ் திட்டம் வைத்து இருக்கிறார். ஷைத்தான் ஜெயிப்பதை அல்லாஹ் ஒரு நாளும் அனுமதிக்கமாட்டார்.

ஈஸா மஸீஹ்-வின் மரணத்தில் இரண்டு திட்டங்கள் இருக்கிறது. யூத தலைவர்கள் ஈஸா மஸீஹ்-யை கொல்ல திட்டம் தீட்டினார்கள். ஈஸாவின் மரணத்தில் அல்லாஹ்வும் ஒரு திட்டம் தீட்டினார். “ஈஸா மரிக்கவில்லை என்று குர்-ஆன் எங்கேயாவது சொல்லியிருக்கிறதா? இல்லை சூரா பெண்கள் 4:157-ல் யூதர்கள் அவரை கொல்லவோ அல்லது சிலுவையில் அறையவோ இல்லை என்றனர். கவனியுங்கள் “ஈஸா மரிக்கவே இல்லை” என்று இந்த ஆயத்து சொல்லவில்லை, இன்னொன்றையும் கவனிக்கவேண்டும். யூதர்கள் யாரையும் மரண தண்டனை அனுபவிப்பதை அனுமதிக்க மாட்டார்கள். ரோமர்கள்தான் இதை

செய்வார்கள். ஆகவே, யூதர்கள் இல்லை, ரோமர்கள்தான் இயேசுவை கொன்றார்கள். “ஈஸா மரிக்கவில்லை” என்று குர்-ஆன் சொல்லுவதாக நீங்கள் நினைத்தால் பின்வரும் ஆயத்தை படியுங்கள்.

3:55 அல்லாஹ் கூறியதை ஞாபகப்படுத்துங்கள்: ஈஸாவே நிச்சயமாக நான் உங்களுக்கு (உங்களுடைய) ஆயுளை முழுமை செய்வேன். உங்களை நம்மளவில் உயர்த்திக் கொள்வேன். நிராகரிப்பவர்களிலிருந்து உங்களை பரிசுத்தமாக்கி வைப்பேன். உங்களைப் பின்பற்றுபவர்களை நிராகரிப்பவர்கள் மீது இறுதிநாள் வரையில் மேலாக்கியும் வைப்பேன். என்னிடமே நீங்கள் பின்னும் வருவீர்கள். நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருப்பவைகளைப்பற்றி நான் உங்களுக்கிடையில் தீர்ப்பளிப்பேன்.” (என்றும் கூறினான்).

55-ஆம் ஆயத்தை அரபியில் ஓதும்படி உங்கள் இமாமை கேளுங்கள், அவர் ஓதுவதை நன்றாக கவனித்தால் “முத்தவபீக்க” என்ற அரபு வார்த்தையை அவர் வாசிப்பிலிருந்து கேட்பீர்கள். “முத்தவபீக்க” என்ற வார்த்தையின் வேராக ‘தவாபா” என்ற வார்த்தை உள்ளது. இந்த வார்த்தையின் அர்த்தம் “மரிப்பது” அல்லது

“மரிக்க ஒப்புக் கொடுப்பது” ஆகும். “தவாபா” என்ற வார்த்தை குர்-ஆனில் 26 முறை வருகிறது. இதில் 24 முறை “மரிப்பது” அல்லது “மரிக்க ஒப்புகொடுப்பது” என்றும் “நித்திரை அளிப்பேன்” என்று இரண்டு முறையும் மொழி பெயர்க்கப்-பட்டிருக்கிறது. “உயர்த்திக் கொள்ளுவேன்” என்ற அர்த்தத்தில் எப்பொழுதும் மொழிபெயர்ப்பு செய்யப்படவில்லை. மற்ற மொழிகளில் குர்-ஆனை மொழி பெயர்ப்பு செய்யும் மொழிபெயர்ப்பாளர்கள் அரபு குர்-ஆனில் இருப்பதை அப்படியே தவறாமல் மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும். எனவே 55-ம் ஆயத்தை சரியாக மொழிபெயர்ப்பு செய்தால்” “அல்லாஹ் கூறியதை ஞாபகபடுத்துங்கள், “ஈஸாவே நிச்சயமாக நான் உங்களை மரிக்க செய்வேன், பிறகு என்னிடத்திற்கு எழுப்பிக் கொள்வேன்....” என்றுதான் இருக்கும்.

சூரா மர்யம் 19:33-ல் “நான் பிறந்த நாளிலும், நான் மரணிக்கும் நாளிலும், நான் உயிர் பெற்றெழும் நாளிலும் சாந்தியும், சமாதானமும் என்மீது நிலை பெற்றிருக்கும்” என்று ‘ஈஸா’ தன்னைப்பற்றி சொல்லியிருக்கிறார். உயிர் பெற்றெழும் என்றால் “மரணத்தில் இருந்து எழுப்பப்படுவது” இது அல்லாஹ்வின் பரிபூரணமான திட்டம். ஆனால் அல்லாஹ் ஈஸாவை ஏன் கொல்ல வேண்டும்? இதற்கு பதிலை நான் பிறகு

சொல்கிறேன். இப்பொழுது ‘ஈஸா எங்கே இருக்கிறார்கள்? அல்லாஹ்-விடமே ஈஸா உயிரோடு எழுப்பப்பட்டடார்கள் என்று 55-ம் ஆயத்து நமக்கு சொல்கிறது. அல்லாஹ் 100% பரிசுத்தமானவர் என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

யாராவது ஒருவர் அல்லாஹ்-விடத்தில் நேரடியாக கொண்டுவரப்பட்டால், அல்லாஹ்-வை போல அவர்களும் 100% பரிசுத்தமாகத்தான் இருக்க வேண்டும். எந்த அசுத்தமும் அல்லது ஹராம் செய்த மனிதனும் அல்லாஹ்வின் சமூகத்தில் வரவே முடியாது.

ஈஸா மஸீஹ்-ன் வாழ்க்கைத் தொகுப்பை
இங்கே பாருங்கள்:

- ஆதமின் ஹராம் சுபாவம் இல்லாதவராய் பிறந்தார்
- ஹராமில்லாமல் பரிசுத்தமாய் வாழ்ந்தார்
- உயிரின் மீதும், மரணத்தின் மீதும் அல்லாஹ் ஈஸாவிற்கு வல்லமையை கொடுத்தார்
- அல்லாஹ்வினிடத்திற்கு நேர் பாதையில் (தாரிக்கா) ஈஸா மஸீஹ் பிரயாணம் பண்ணினார்
- ஈஸா மஸீஹ் இப்போது அல்லாஹ்வுடன் இருக்கிறார்

இந்த உண்மை நேரடியாக குர்-ஆனில் இருந்து நமக்கு வருகிறது. உண்மையான முஸ்லீம்கள் இந்த உண்மையை புரிந்து கொண்டவர்கள்

இன்ஜீல் ஷரிப்-ல், ‘தன்னைப்பற்றி ஒரு ஆயத்தை ஈஸா மஸீஹ் உறுதியாக சொல்லி இருக்கிறார்’ அவர் சென்னார் “நானே வழியும், உண்மையும், ஜீவனுமாய் இருக்கிறேன்” (யுஹொன்னா 14:6) அல்லாஹ்-விடம் செல்ல ‘ஈஸாவிற்கு வழி தெரியும், ஏனென்றால் அவர் நேர் பாதையில் (தாரிக்கா) பிரயாணம் செய்து அல்லாஹ்விடம் சென்றார் என்ற இன்ஜீல் ஷரி.ீப் ஆயத்தை சூரா ஆல இம்ரான் 3:42-55 உறுதிப்படுத்துகிறது.

“ஈஸா மஸீஹ் சத்தியமுள்ளவர், ஏனென்றால் அவர் அல்லாஹ்-வின் வார்த்தை-யானவர். அல்லாஹ்-வின் வார்த்தை எப்பொழுதும் சத்தியமானவை. ஈஸா மஸீஹ் ஜீவன். ஏனென்றால், மரணத்தின் மீது வல்லமையை அவருக்கு அல்லாஹ் கொடுத்தார்.

## ஜன்னத்திற்கு ஒரே
## நேர் பாதை (தாரிக்கா)

பயணம் செய்யும் போது கண்பார்வை இழந்தவர்களுக்கு உதவி தேவை. சூரா ஆல இம்ரான் 3:42-55-ஐ நான் வாசிக்கிறவரை, நான் என்னை ஒரு “பக்தியான” குருடனாகவே உணர்ந்தேன். ஜன்னத் செல்லும் நேர் பாதை (தாரிக்கா)-வை நான் பார்க்க முடியாதபடி என்னுடைய பொல்லாத மற்றும் ஹராம் சுபாவம் என்னை தடுத்தது. யாராவது ஒருவர் எனக்கு உதவி செய்ய வேண்டும், வழியை தெரிந்த ஒருவர்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும், இன்னொரு குருடர் எனக்கு உதவி செய்வதில் எனக்கு எந்த பயனும் இல்லை. முன்பே நேர்பாதையில் (தாரிக்கா) பிரயாணம் செய்து ஜன்னத்தை தன் வீடாக கொண்ட ஒருவர் தான் எனக்கு ஜன்னத்திற்கு போகும் வழியை காட்ட முடியும்.

நாம் ஜன்னத்திற்கு போக ஈஸா மஸீஹ்-ஆல் உதவி செய்ய முடியுமா? சூரா ஆல இம்ரான் 3:42-55-ல் அல்லாஹ்வின் விசேஷமான செய்தி என்று நான் நம்புகிறேன். இதில் இருக்கிற அற்புதமான ஒரு செய்தி, ஜன்னத்திலிருந்து ஒரு நபி இறங்கி வந்து, ஒரு மனிதனாக வாழ்ந்து, பிறகு தன் வீடாகிய ஜன்னத்திற்கு திரும்ப சென்றார். ஆம் ஈஸா மஸீஹ் நமக்கு உதவி

செய்ய முடியும் என்று நான் கட்டாயம் ஈமான் (நம்புகிறேன்) கொள்கிறேன்.

இந்த சிறு புத்தகத்தின் ஆரம்பத்தில், குர்-ஆனில் இருந்து ஒரு ஆயத்தை சொன்னேன், அதன் பிறகு நான் ஒரு கேள்வியை கேட்டேன். அந்த கேள்விக்கு பதில் சொல்லக் கூடிய சரியான நேரம் இதுதான்.

சூரா அல் மாயிதா 5:83 "தவிர தூதர்மீது அருளப்பட்டவைகளை செவியுற்றால் உண்மையை அவர்கள் உணர்வதன் காரணமாக அவர்களின் கண்கள் (தாரை தாரையாக) கண்ணீர் வடிப்பதைக் காண்பீர்கள். அன்றி "எங்கள் இறைவனே! நாங்கள் நம்பிக்கை கொண்டோம். ஆகவே, சாட்சி கூறுபவர்களுடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக! என்றும் கூறுகின்றனர்". இந்த ஆயத்தில் அவர்கள் என்பவர்கள் யார்? என்றுதான் நான் கேள்வி கேட்டிருந்தேன். இதற்கு 'ஈஸாவை பின்பற்று-கிறவர்கள் 'உண்மையான' அல்லது 'நிறைவான' முஸ்லீம்கள் என்று தங்களை அழைத்து கொண்டவர்கள்' என்பதுதான் சரியான பதில்.

ஜன்னத்திற்கு போக நீங்கள் ஈஸாவை எப்படி பின்பற்றுவீர்கள்?

அல்லாஹ் உங்களை நேசிக்கிறார், நீங்கள் மௌத் ஆன பிறகு தன்னோடு நீங்கள் ஜன்னத் வர வேண்டுமென அவர் விரும்புகிறார். ஆனால் நீங்கள் ஜன்னத் போக வேண்டுமானால், உங்களில் உள்ள ஹராம்கள் முழுவதுமாக உங்களை விட்டு நீக்கப்பட வேண்டும். இந்த ஹராம் பிரச்சனையை தீர்ப்பதற்கு நம்மை விட்டு ஹராமின் சாபம் நீங்கவும் முழுமையான மன்னிப்பு நமக்கு கிடைக்கவும் அல்லாஹ் ஒரு வழியை நமக்காக உருவாக்கினார். ஆதமில் தொடங்கி பலிசெலுத்தும் முறையாகிய “கொர்பானியை” (பலி) செலுத்துபவர்களின் ஹராம்கள் மன்னிக்கப்-படும். யாருடைய ஹராம்கள் மன்னிக்கப்பட்டு, நீக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் மௌத் (மரணம்) ஆன பிறகு நேரடியாக அல்லாஹ்-வுடன் இருக்கும்படி ஜன்னத் செல்ல முடியும்.

நாம் செய்த ஹராம்களுக்கு நமக்கு கிடைக்க வேண்டிய தண்டனைக்கு பரிகாரமாக கொர்பானி இருக்கிறது. ஒரு நீதிபதிக்கு முன்பு நீதிமன்ற அறையில் நீங்கள் நிற்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். நீதிபதி நீதியும் நியாயமும் உள்ளவர். உங்கள் ஹராமினிமித்தம் நீதிபதி உங்களை மரண தண்டனை கொடுத்து நியாயம் தீர்த்தார். நீங்கள் குற்றவாளியாக இருந்தாலும், நீங்கள் பெற வேண்டிய தண்டனையை தன்மீது ஏற்றுக்கொள்ள ஹராமில்லாமல், பரிசுத்தமான ஒருவரை அல்லாஹ் ஏற்படுத்தினார். உங்கள்

தன்டனையை அல்லாஹ் தூரமாக விலக்கியதால் அவர் நீதியுள்ள நியாயாதிபதி இல்லை. ஒவ்வொரு குற்றத்திற்கும் தண்டனை கிடைக்க வேண்டும், அதுதான் சரியான நீதி. உங்கள் ஹராமின் குற்றத்திற்காக நீங்கள் மரண தன்டனைக்கே தகுதியாக இருக்கிறீர்கள்.

கொர்பானி தரும் பக்ரீத் பண்டிகையை சிந்தனை செய்து பாருங்கள். முதலாவதாக, சுத்தமான மிருகத்தை கண்டுபிடிக்க வேண்டும். வியாதிப்பட்ட அல்லது தரம் குறைந்த மிருகத்தை கொர்பானிக்காக பயன்படுத்தக் கூடாது. கொர்பானி கொடுப்பதற்கு முன்பு நாம் செய்ய வேண்டிய துஆ என்னவென்றால், “அல்லாஹ் நான் உமக்கு எதிராக ஹராம் செய்து, குற்றவாளியாக இருக்கிறேன். நான் மௌத் (மரணம்) ஆகும் வரை என்னிலிருந்து இரத்தம் சிந்திக்கொண்டே இருக்க நான் பாத்திரனாக இருக்கிறேன். எனவே அல்லாஹ்வே, என் இரத்தத்தை என்னிலிருந்து எடுக்காமல் என்மீது இரக்கமாயிருந்து இந்த பாவமறியாத மிருகத்தின் இரத்தத்தை எடுத்துக் கொள்ளும் என்பாதாகும்”.

ஆதமின் நாட்களிலிருந்து ‘ஈஸா மஸீஹ் நாட்கள் வரைக்கும் கொர்பானி கொடுக்கப்பட்டு வந்தது. கொர்பானிக்கு எப்பொழுதும் மிருகத்தின் இரத்தம்தான் வேண்டுமென அல்லாஹ் கேட்க-

வில்லை. முன்னுரைக்கப்பட்ட தன்னுடைய மகனை கொர்பானி தரும்படி இப்ராஹிம்-மை அல்லாஹ் கேட்டார். கடைசி நேரத்தில் மகனை பலிசெலுத்த வேண்டாமென அல்லாஹ்வினால் இப்ராஹிம் கேட்டுக்கொள்ளப்பட்டார். தனக்காக இப்ராஹிம் கொண்டுள்ள அன்பையும் மற்றும் தியாகத்தையும் அல்லாஹ் சோதித்தார்.

நான்கு கித்தாப்களையும் வாசிக்கும் உண்மையான முஸ்லீம்கள் கொர்பானியைக் குறித்து மிகத்தெளிவாக புரிந்து வைத்திருக்-கிறார்கள். ‘ஈஸாவை பின்பற்றுகிற முஸ்லீம்கள் கொர்பானி கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள் ஏன்?

இந்த துனியாவில் கடந்தகால, நிகழ்கால, எதிர்காலத்தில் வாழும் எல்லா ஜனங்களுக்காக அல்லாஹ் தர வேண்டிய மிகக் கடைசியான கொர்பானிக்கு நிழலாட்டமாகத்தான் ஆல இம்ரான் 3:54-55-ன் கொர்பானி இருக்கிறது என்று உண்மையான முஸ்லீம்கள் அறிந்திருக்கிறார்கள். ஹராமின் சாபத்திலிருந்து முழுமையான விடுதலையை நாம் பெறும்படி இந்த துனியாவின் அனைத்து ஜனங்களுக்காக கொர்பானியை கொடுத்தது மனுக்குலத்தின் மீது அல்லாஹ் வைத்த அன்பையும், அவர் நமக்கு கொடுக்கிற நிச்சயத்தையும் வெளிப்படுத்துகிறது. ஆனால் இந்த துனியாவின் எல்லா ஜனங்களுக்காக

அல்லாஹ் எதை தன்னுடைய கொர்பானியாக கொடுப்பார்?.

ஈஸா மஸீஹ்-ன் இந்த பிறப்பு துனியாவிற்கு (உலகிற்கு) ஒரு அடையாளம் என்று குர்-ஆன் சொல்லுகிறது. துனியாவின் எல்லா ஜனங்களுக்காக அல்லாஹ் கொடுக்கிற கொர்பானி அதிக தூய்மையும், பரிசுத்தமும், இருக்கிறவைகளிலேயே மிகச் சிறப்பானதாக வல்லமை உள்ளதாக அல்லாஹ்-விற்கு தேவைப் பட்டது. ஹராம் அறவே இல்லாத, மிகவும் வல்லமையான ஈஸா மஸீஹ்-ன் இரத்தம்தான் இந்த துனியாவிற்கு போதுமான கொர்பானி என்று குர்-ஆனில் நாம் பார்த்தோம்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தன் மகனுக்கு இப்ராஹிம் எதை செய்யக்கூடாது என்று அல்லாஹ் நினைத்தாரோ, அதையே அல்லாஹ் ஈஸா அவர்களுக்கு செய்தார். ஹராமே செய்யாத ஒருவர் குற்றவாளிக்காக தன் இரத்தத்தை சிந்தினாரே அதுதான் நாம் எங்குமே பார்க்க முடியாத இயல்பு நிலைக்கு மாறான அன்பின் அடையாளமாக இருக்கிறது. நாம் பெறவேண்டிய தண்டனையை ஈஸா மஸீஹ் ஏற்றுக்கொண்டார். உண்மையான முஸ்லீம்கள் ஏன் நன்றி உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று இப்பொழுது உங்களுக்கு தெரியும். நமக்கு தகுதியானதை அல்லாஹ் நமக்கு தரவில்லை

என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். யுஹொன்னா 15:13-ல் இன்ஜீல் சொல்லுகிறது “ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.

இன்றைக்கு நீங்களும் கூட, உண்மை-யான முஸ்லீம் ஆகலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான், அல்லாஹ் உங்களுக்கு பதிலாக ஈஸா மஸீஹ்-யை கொர்பானி ஆக்கினார் என்று நம்புங்கள். இப்போது நில்லுங்கள். உங்கள் கைகளை அல்லாஹ்-வுக்கு நேராக உயர்த்துங்கள். என் ஹராம் குற்றத்தின் தண்டனையை மன்னிக்க நீர் கொடுத்த கொர்பானியாகிய ‘ஈஸாவிற்காக நன்றி. நான் அவரை ஏற்றுக்கொள்கிறேன் என்று தாழ்மையோடு அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள். இவ்விதமாய் அல்லாஹ் உங்கள் ஹராம்களை மன்னித்து, சாபத்தை நீக்குவார். உங்கள் ஹராம்களில் இருந்து எப்பொழுது சுத்தமாகிறீர்களோ, அப்பொழுது நீங்கள் மரித்த பிறகு அல்லாஹ்-வுடன் இருக்கும்படி நீங்கள் போக முடியும். இப்பொழுது நீங்கள் உங்கள் வாழ்வை சமாதானத்துடன் வாழலாம், ஏனென்றால் மௌத் ஆனபிறகு நேரடியாக நீங்கள் அல்லாஹ்விடம் செல்ல முடியும்.

இச்சிறு புத்தகம் இந்த துனியாவின் அனேக இஸ்லாமிய நாடுகளில் நடக்கும் உண்மைச் சம்பவங்களின் பரதிபலிப்பாக இருக்கிறது.

(முகமதுவே) நாம் உங்களுக்கு
அருட்செய்திருக்கும் இதில் நீங்கள் சந்தேகித்தால்
உங்களுக்கு முன்னர் அருளப்பட்ட வேதங்களை
ஓதுபவர்களிடம் நீங்கள் கேட்டுப் பாருங்கள்.
நிச்சயமாக உங்கள் இறைவனிடமிருந்தே
உண்மை (யான இவ்வேதம்) உங்களிடம் வந்தது.
ஆதலால் சந்தேகப்படுபவர்களில் (ஒருவராக)
நீங்களும் ஆகிவிட வேண்டாம்.

சூரா 10:94